தேதி: 23-02-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.174/2022

வழக்கு சாட்சி எண். PW1

| | |
|---|---|
| பெயர்: செந்தில்குமார் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் . )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது பண்ணைவிளை புதுாரில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன், விபத்தில் இறந்து போனது எனது உடன் பிறந்த அக்காவின் கணவர் ஆவார். விபத்தை நான் நேரில் பார்த்தேன். கடந்த 07.09.2019 ம் தேதி மாலை 4.15 மணி அளவில் நானும் எனது அண்ணன் செல்வம் என்பவரும் இருச்சக்கரவாகனத்தில் ஏரலில் இருந்து சாயர்புரம் நோக்கி சென்று கொண்டு இருந்தோம்.

2. எங்களுக்கு முன்னால் விபத்தில் இறந்து போன ரவி என்பவர் அவரது இருச்சக்கரவாகனத்தில் சென்றார். எனது மச்சான் பண்ணைவிளை பங்களாவில் உள்ள வெல்டிங் ஓர்க் ஷாப் அருகில் செல்லும் போது நான்கு சக்கர வாகனம் டுரிஸ்ட் வாகனம் எனது மச்சான் ஓட்டி வந்து வாகனத்தின் மீது ஹாரண் அடிக்காமல் அதிவேகமாகயும் அஜாக்கிரதையாகவும் வந்து மோதியது. அதனால் எனது மச்சானுக்கு தலையில்அடிப்பபட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். என்னுடன் எனது அண்ணன் செல்வம் சம்பவத்தின் போது உடன் இருந்தார்.

3. விபத்தை ஏற்படுத்திய நான்கு சக்கர டுரிஸ்ட் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் பண்டாரவிளையைச்சேர்ந்த ஜெபத்துரை ஆவார். இது சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார்மனு **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரியை சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்.

<u>குறுக்கு விசாரணை</u>

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு வளைவுப்பகுதி என்றால் சம்பவ இடத்தை கடந்து தான் வளைவுப்பகுதி உள்ளது. அதனை எனது புகார்மனுவில் சம்பவ இடம் வளைவுப்பகுதி என்று குறிப்பிட்டு உள்ளேனா என்றால் இல்லை.

5. எனது மச்சான் சென்று கொண்டு இருந்த இருச்சக்கர வாகனத்தின் நிறம் என்ன என்றால் சிவப்பு கலர் ஆகும். இதனை எனது புகார் மனுவில் தெரிவித்து உள்ளேனா என்றால் இல்லை.

6. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் கடை உள்ள பகுதி என்றால் வெல்டிங்க ஓர்க் ஷாப் மட்டும் தான் இருந்தது. எனது மச்சானுக்கு சொந்த ஊர் என்ன என்றால் பண்ணை விளை புதுார் ஆகும்.

7. எனது ஊர் பண்ணை விளை புதுாருக்கு செல்ல இந்த வழியை தவிர்த்து வேறு வழி எதுவும் உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்த போது நான் எவ்வளவு துாரத்தில் இருந்தேன் என்றால் 100 அடி ஆகும்.

8. எனது அக்கா கணவருடன் இருச்சக்கர வாகனத்தில் யார் உடன் வந்தார்கள் என்றால் யாரும் வரவில்லை. சம்பவ இடத்தின் அருகே வேகத்தடை உள்ளதா என்றால் கிடையாது. எதிரி தான் எனது மச்சானுக்கு விபத்தை ஏற்படுத்தினார் என்று எனக்கு எவ்வாறு தெரியும்

என்றால் விபத்து நடைபெறும் போது எதிரியை பார்த்தேன். அவர் பெயர் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் எனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் தான்.

9. சம்பவம் நடந்த ரோட்டில் எதிர் எதிராக இரண்டு வாகனங்கள் செல்ல வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. பண்ணைவிளை பங்களா வளைவில் இருந்து சம்பவ இடம் எவ்வளவு தூரம் என்றால் 100 அடி இருக்கும் இதனை தான் புகார் மனுவிலும் சொல்லி உள்ளேன் என்றால் வெல்டிங் ஓர்க்ஷாப் என்று தான் சொல்லி உள்ளேன். அந்த வெல்டிங்க ஓர்க் ஷாப்பின் கடை பெயர் போடவில்லை.

10. சம்வத்தன்று நாங்கள் எங்கு சென்றோம் என்றால் ஏரலில் உள்ள மளிகைக்கடைக்கு சென்றோம். மளிகைச்சாமான்களை நான் தான் வைத்து இருந்தேன். அவர் வைக்கவில்லை. சம்பவம் நடந்த இடம் நடு ரோட்டில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் நடு ரோட்டில் தான் நடந்தது.

11. சம்பவம் நடந்த ரோடு எவ்வளவு அகலம் என்றால் 20 அடி ஆகும். சம்பவம் நடந்தஉடன் 50 பேர் கூடியிருப்பார்களா என்றால் எத்தனை நபர் என்று எனக்கு சரியாக நினைவில் இல்லை.

12. நான் காவல்நிலையத்தில் சம்பவத்தினத்தன்றே மனு கொடுத்தேன் என்றால் நான் தான் காவல் நிலையத்திற்கு முதலில் சென்றேன். சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் சென்றார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது மச்சானும் தான் பைக்கில் செல்லும் போது பேசிக்கொண்டு சென்றதால் தான் எனது மச்சானுக்கு விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போனது எனது மச்சான் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 23-02-2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.174/2022

வழக்கு சாட்சி எண். PW2

| | |
|---|---|
| பெயர்: செல்வம் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரி ஆஜர் . )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது பண்ணைவிளை புதுாரில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன், அ.சா.1 யை எனக்கு தெரியும் அவர் எனது தம்பி ஆவார். விபத்தில் இறந்து போன ரவி எனது அக்காவின் கணவர் ஆவார். விபத்தை நான் நேரில் பார்த்தேன். கடந்த 07.09.2019 ம் தேதி மாலை 4.15 மணி அளவில் நானும் அ.சா.1 ம் என்பவரும் இருச்சக்கரவாகனத்தில் ஏரலில் இருந்து சாயர்புரம் நோக்கி சென்று கொண்டு இருந்தோம்.

2. எங்களுக்கு முன்னால் விபத்தில் இறந்து போன ரவி என்பவர் அவரது இருச்சக்கரவாகனத்தில் சென்றார். எனது மச்சான் பண்ணைவிளை பங்களாவில் உள்ள வெல்டிங் ஓர்க் ஷாப் அருகில் செல்லும் போது நான்கு சக்கர வாகனம் டுரிஸ்ட் வாகனம் எனது மச்சான் ஓட்டி வந்து வாகனத்தின் மீது ஹாரண் அடிக்காமல் அதிவேகமாகயும் அஜாக்கிரதையாகவும் வந்து மோதியது. அதனால் எனது மச்சானுக்கு தலையில்அடிப்பபட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். என்னுடன் அ.சா.1 சம்பவத்தின் போது உடன் இருந்தார்.

3. விபத்தை ஏற்படுத்திய நான்கு சக்கர டுரிஸ்ட் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் பண்டாரவிளையைச்சேர்ந்த ஜெபத்துரை ஆவார். இது சம்மந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். எதிரியை சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

4. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் புகார் மனு கொடுக்கும் போது தான் காவல் நிலையத்திற்கு சென்றேன்.

5. சம்பவம் நடந்த இடம் ஒரு வளைவுப்பகுதி என்றால் சரிதான். புகார் மனுவில் நான் கையொப்பம் போடும் போது அதனை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்ககவில்லை. விபத்தில் இறந்து போனது எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.